181

திருப்பூர் விற்பனைக்குழு முதுநிலை செயலாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை திரு.இரா.பாலசந்திரன் பி.ஏ.,

ந.க.எண்: அ1/5134/2018-2

நாள்: 23.01.2020

| | |
|---|---|
| பொருள்: | பணிக்குழு - திருப்பூர் விற்பனைக் குழு - இளநிலை உதவியாளர் திரு.அ.தேவராஜ் - இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து உத்திரவிடுதல் - தொடர்பாக |
| பார்வை: | 1)அரசாணை எண்: 978 வேளாண்மை(AM-III)துறை நாள்: 23.05.1985.<br>2)தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலரின் கடித எண்: 1185/PSD-H1/2019 நாள்:18.02.2019.<br>3)இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்:அ1/5134/2018 நாள்:22.02.2019. |

உத்தரவு:-

பார்வை(1)ல் காணும் அரசாணையின்படி, விற்பனைக்குழுவில் பணியமர்த்தப்படும் இளநிலை உதவியாளர் பதவிக்கு சம்மந்தப்பட்ட விற்பனைக்குழுவின் செயலாளர் பணி நியமன அலுவலர் என அறிவித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை(2)ல் காணும் கடித்தின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு திரு.அ.தேவராஜ் தேர்வு செய்யப்பட்டு திருப்பூர் விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து பார்வை(3)ல் காணும் உத்தரவின்படி தனியரை திருப்பூர் விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்து திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்க உத்தரவிடப்பட்டது. அதன்படி தனியர் 25.02.2019 முற்பகல் பணியில் இணைந்துள்ளார்.

தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 25.02.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்தும் தொடர்ச்சியான மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

தனியர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு, வேளாண்மை விற்பனைத்துறை பணியாளர்களுக்கான துறைத் தேர்வு மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த பணிவரன்முறை உத்தரவு 2015-2018ம் ஆண்டு நியமனங்கள் தொடர்பாக சென்னை

//தபிபா//

மற்றும் மதுரை கிளை உயர்நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்குட்பட்டது. இந்த உத்தரவினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை 2வது நகலில் தேதியுடன் கூடிய கையொப்பமிட்டு மீள அனுப்ப அறிவுறுத்தப்படுகிறது.

முதுநிலை செயலாளர்,
திருப்பூர் விற்பனைக்குழு,
திருப்பூர்

பெறுநர்:

திரு.அ.தேவராஜ்
இளநிலை உதவியாளர்,
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,
திருப்பூர்.(உரிய வழிமுறையில்)

நகல்:
1)அ8 பிரிவு
2)இருப்புக்கோப்பு
3)பணிப்பதிவேடு.

அனுப்பப்பட்டது
நாள் : 24/01/2020